05.08.2024
O.S.No.189/2019

வா.சா.1.திரு.செல்வகுமார்   த.பெ.சுப்பிரமணியன்

சாட்சி இன்று  அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

1. நான் திண்டுக்கல் கிழக்கு தாலுகாவில் தலைமையிடத்து துணை வட்டாட்சியராக பணியாற்றி வருகிறேன். நான் மதுரை பொன்னகரத்தில் வசித்து வருகிறேன். தாவா சொத்து அமைந்துள்ள இடம் எனது வீட்டில் இருந்து சுமார் 10 கிலோமீட்டர் இருக்கும். தாவா சொத்தினை நான் குருசாமி ஆசாரியிடம் இருந்து எனது தந்தை 2006ம் ஆண்டு கிரையம் பெற்றார். தாவா சொத்தினை எனது தந்தை கிரையம் வாங்கியபோது நான் உடன் இல்லை என்றால் சரிதான். எனது தந்தை கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் கிரைய ஆவணத்தினை அசலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாசொத்தினை எனது தகப்பனார் கிரையம் பெறும் போது பிளாட்டாக கிரையம் வாங்கினார், அளந்து அத்துமால் செய்து கிரையம் வாங்கவில்லை. எனது தகப்பனாருக்கு கிரையம் கொடுத்த குருசாமி என்பவர் அய்யனாரிடம் இருந்து கிரையம் பெற்றார். மேற்படி குருசாமி கிரைய ஆவணத்தின் அசலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. அதேபோல் அய்யனார், இஎம்ஜி சௌந்திராஜன் என்பவரிடம் இருந்து 20.04.1996ம் தேதியில் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் கிரைய ஆவணத்தின் அசலையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அய்யனார், இஎம்ஜி சௌந்திராஜன் என்பவரிடம் இருநது 11.09.1997 தேதியில் பொது அதிகார ஆவணம் எழுதி வாங்கியதாக சொல்லப்படும் ஆவணத்தின் அசலையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து காலியிடமாக உள்ளது.  தாவா சொத்து மற்றும் இந்த வழககோடு இணைந்து தாக்கல் செய்துளள மற்ற வழககு சொத்துக்களும் ஒன்றோடொன்று இணைந்த பகுதி என்றால் சரிதான். தாவா சொத்து கம்பிவேலி அமைக்கப்பட்டு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தினை போன்று இந்த வழக்கோடு தொடர்புயை மற்ற தாவாசொத்துக்களும் கம்பி வேலிக்குள் தான் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

3. பிரதிவாதிதான் கம்பிவேலி போட்டுள்ளார் என்றால் யார் போட்டார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிதான் கம்பிவேலி போட்டார் என்றாலும் அதைதெரிந்துகொண்டே மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. கம்பிவேலியில் 4 திசையில் கேட் உள்ளது என்றால் சரியல்ல, கேட்டே கிடையாது.  கம்பிவேலியில் 4 கேட் உள்ளது என்றாலும்,

அதை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. சுமார் 4 ஆண்டுகளாக கம்பி வேலி உள்ளது. தாவா சொத்தினை நான் கடைசியாக நீதிமன்ற ஆணையாளர் அளவீடு செய்த போது பார்த்தேன். நான் அப்போது உடன் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளதுதான் தாவா சொத்து என்றால் சரிதான், **அந்த ஆவணம் பி.வா.சா.ஆ-1 ஆக** குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் கோபாலகிருஷ்ண கோன் பள்ளி காணப்படுகிறது என்றால் சரிதான். மேற்படி புகைப்படத்தில் காணப்படும் காலியிடம் பள்ளி மாணவர்கள் விளையாட்டு மைதானமாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி இடத்தினை பள்ளி மாணவர்கள் விளையாட்டு மைதானமாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றாலும், அதனை தெரிந்துகொண்டே மறைத்துபொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும சரியல்ல. அந்த பள்ளி சுமார் 50 ஆண்டுக்கு மேல் பழமையான பள்ளி என்றால் சரிதான். பிரதிவாதிகள் அனுமதி இல்லாமல் தாவா சொத்திற்குள் செல்ல முடியாது என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்றதாக கூறப்படும் தாவாசொத்தும் இந்த வழக்கேகாடு இணைந்து காட்டப்படும் மற்ற வழக்கோடு காட்டப்படும் சொத்துக்களும் ஒன்றோடொன்று இணைந்து ஒரே சமுக்கமாக காணப்படுகிறது என்றால் சரிதான். மேற்சொன்ன அனைத்து சொத்துக்களும் தாவா சொத்தோடு சேர்ந்து ஒரே சமுக்கமாக முள்கம்பிவேலிக்குள் அமைந்துள்ளது என்றால் சரிதான். கோபாலகிருஷ்ண கோன் பள்ளியை நான் பார்த்துள்ளேன். மேற்படி பள்ளிக்கு பாத்தியப்பட்ட விளையாட்டு மைதானம் தான் முள்கம்பிவேலிக்குள் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

5. அய்யனார் என்பவர் இளம்ஜி சௌந்திராஜன் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றதாக சொல்லப்படும் 12.03.1997 கிரைய ஆவணம் மற்றும் வா.சா.ஆ-2 பொது அதிகார ஆவணம் ஆகியவை இளம்ஜி சௌந்திராஜன் எழுதி கொடுத்த ஆவணம் அல்ல என்றும், அவருடைய கையொப்பம் இல்லை என்றும் பிரதிவாதிகள் மறுத்துள்ள நிலையில் அதன் உண்மை தன்மையை நிருபிக்க நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-1 மற்றும் வா.சா.ஆ-2 ஆவணத்தின் உண்மைதன்மையை நிருபிக்க வகையில் எனது தந்தை கிரைய ஆவணப்படி தாவா சொத்தில் நான் எந்தவித உரிமையும் கொண்டாட முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்கள்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ஆகியவை இளம்ஜி சௌந்திராஜன் என்பவரிடம் இருந்து அய்யனார் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் காலகட்டத்தில் மதுரையில் சார்பதிவாளர் அலுவலகம் இருந்தது என்றால் சரிதான். மோசடியாக தாவா சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மதுரையில் பதிவு

செய்ய வேண்டிய ஆவணத்தினை கேரளாவில் உள்ள பாரசாலையில் பதிந்துள்ளார் என்றால் சரியல்ல, கேரளாவில் இளம்ஜி செளந்திராஜனுக்கு சொத்து இருநததால் அதனுடம் இதனையும் பதிந்துள்ளார்கள், கேரளாவில் இளம்ஜி செளந்தராஜனுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை நான் நேரிடையாக பார்க்கவில்லை, அது தொடர்பான ஆவணத்தினையும் நான் பார்த்தில்லை என்றால் சரிதான்.

6. அய்யனார் தாவா சொத்தினை மோசடியாக அபகரித்து குருசாமிக்கு கிரையம் கொடுத்து, அதன் அடிப்படையில் எனது தகப்பனார் கிரையம் பெற்றுள்ளதால் தாவா சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும், பாத்தியதையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்.169/1 மற்றும் அதன் உட்பிரிவு சர்வே எண்.28/23 ஆகும். வா.சா.ஆ-4 ல் சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 காணப்படவில்லை என்றால் சரிதான். அதிலிருந்து உட்பிரிவாகி தற்போது சர்வே எண்.28/23 என தாக்கலாகி உள்ளது. அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்டதாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-4 பட்டா பெறும் போது பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரதிான். எந்த நடவடிக்கையின் அடிப்படையில் வா.சா.ஆ-4 வழங்கப்பட்டது என்ற குறிப்பு எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். எனதுசெல்வாக்கினை பயன்படுத்தி பிரதிவாதிகளுக்க தெரியாமல் மோசடியாக வா.சா.ஆ-4 நான் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து காலியிடமாக உள்ளது என்றால் சரிதான்.

7. காலியிடத்திற்கு கிஸ்திரசிது வழங்கும் வழக்கம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-5 முதல் வா.சா.ஆ-10 கிஸ்தி ரசிதுகள் இந்த வழககிற்கான செல்வாக்கினை பயன்படுத்தி பெறப்பட்ட ஆவணம் என்றாலும், அதன் அடிப்படையில் தாவா சொத்தில் எனக்கு எந்த அனுகூலமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நாங்கள் முள்கம்பி வேலி அமைக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-32 வரைபடம் நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எனது கிரைய பத்திரத்துடன் இணைந்து ஒரு பகுதியாக இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-32 ஆவணம் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றாலும், இந்த வழக்கிற்கும், ஆவணத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

8.தாவா சொத்து கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்து கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், நீதிமன்றத்தில் உரிய முன் அனுமதி பெறாமல் நான் கிரையம் பெற்றுள்ளதால் எனது கிரையம்

சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு தெரிய சமதளமாகதான் உள்ளது, மேடுபள்ளமாக இல்லை.

9. தாவா சொத்தினை கிரையம் பெறுவதற்கு 17.03.1988ல் பள்ளி கல்வி துறையிடம் அனுமதி பெற்றதாக எனது வழக்குரையில் சொல்லி உள்ள சங்கதி எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் என்னை இடையுறு செய்ததாக சொல்லி உள்ள சங்கதி இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட சங்கதி என்றால் சரியல்ல. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவின் பேரில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தினை அளந்தார் என்றால் சரிதான். சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவின் பேரில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தினை அளந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றாலும், இந்த வழக்கிற்காக அதனை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. அவ்வாறு தாக்கல் செய்த அறிக்கையில் தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்.169/1 மற்றும் 169/2 ஆகியவை பள்ளி விளையாட்டு மைதானமாகவும், பள்ளி விடுதியாகவும் இருந்து வருவதாக கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல. அய்யனார் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் எனக்கு தெரியவில்லை, என் தகப்பனாருக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லப்படும் குருசாமி உயிருடன் உள்ளாரா என்றால் எனக்கு தெரியவில்லை.

10. அய்யனார் மற்றும் குருசாமி ஆகியோர்களை இந்த வழக்கில் உபயதரப்பினர்களாக சேர்க்கவில்லை என்பதால் உபயதரப்பினர்களை சேர்க்காத தோசத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து கோபாலகிருஷ்ண கோன் அறக்கட்டளைக்கு பாத்தியப்பட்ட சொத்தாக இருப்பதால் மேற்படி அறக்கட்டளையை இந்த வழக்கில் சேர்க்காததாலும், அதேபோல் பள்ளி கல்விதுறையை தரப்பினராக சேர்க்காததாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டில் வங்கி மூலமாக ரூபாய்.50000 வைப்பீடு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் தொடர்பான அசல் வழகது எண்.75/11, 676/2009, 594/2009, 675/09, 671/09 வழக்குகள் தாக்கல் செய்திருந்ததாக நான் பிராதில் சொல்லி உள்ளதால் அந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி வழககுகளில் தாவாசொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்கள்.169/1 மற்றும் 169/2 ஆகியவை குறிப்பிடபடவில்லை என்பதற்காக தாவா சொத்தில் நான் உரிமை கொண்டாட இயலாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை யார் என்று விசாரித்து தெரிந்து கொண்டேன். அவர்களுக்கு சொந்தமாக நில புலன்கள், பள்ளி, கல்லுாரிகள் உள்ளன என்றால் சரிதான்.

11. தாவா சொத்து சம்பந்தமாக எனக்கு உரிமையே இல்லை என பிரதிவாதிகள் தரப்பில் எதிரவாதம் செய்து வரும் நிலையில் தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடிசெய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. அய்யனார் எங்குள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்ரையும் பள்ளிகல்வி துறையினைரையும் தரப்பினராக சேர்க்காமல் இந்த வழகககு தாக்கல் செய்துளளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

12. தாவா சொத்தின் மதிப்பு செண்டு 1-க்கு சுமார் 3 லட்சம் முதல் 5 லட்சம் இருக்குமா என்றால் சரிதான். தாவா சொத்தின் அனுபவத்தில் நாங்கள் ஒருபோதும் இருந்ததில்லை என்றாலும், எனது கிரைய பத்திரம் ஆவணமாகதான் உள்ளதே தவிர நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் தற்போது வரை தாவா சொத்து பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றாலும், தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. தாவா வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் நகல் என்பதால் அதை சாட்சியமாக அனுமதிக்க முடியாது ஆவணங்கள் என்பதால் அதன் அடிப்படையில் எனது வழக்கிற்கு எந்த அனுகூலமும் ஏற்படாது என்றாலும், அந்த ஆணவத்தினை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும் சரியல்ல.